பக்கங்கள் 19

மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 தை 23 செவ்வாய்க்கிழமை 06.02.2024 அதிர்வு 190

## வெவ்வேறு இடங்களில் 2 பேர் வெட்டிக்கொலை

நாட்டில் வெவ்வேறு இடங்களில் இருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தங்காலை மற்றும் சூரியவெவ 04

# எதிர்ப்புக்களையடுத்து அமைச்சர் கெஹலிய இராஜிநாமா!

சுற்றாடல் துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தனது அமைச்சுப் பதவியை இராஜிநாமா செய்துள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பான இராஜிநாமாக் கடிதத்தை அவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைத்துள்ளார் எனவும் தெரியவருகின்றது.

கெஹலிய ரம்புக்வெல சுகாதார அமைச்சராகப் பதவி வகித்தபோது சர்ச்சைக்குரிய தரமற்ற மருந்து இறக்குமதி தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார். 04





# சாந்தன் நாடு திரும்ப தடை எதுவும் இல்லை

## இலங்கை அரசு அறிவிப்பு

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் நீண்ட காலம் சிறைத்தண்டனை அனுபவித்து வந்த நிலையில் விடுவிக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சாந்தன் எனப்படும் தில்லையம்பலம் சுதேந்திரராசா மீண்டும் நாடு திரும்புவதற்கு எந்தவித தடையும் இல்லை என்று இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இன்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

இரு நாடுகளிலும் இருந்து சாந்தன் இலங்கை திரும்புவதற்கான கோரிக்கைகள் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்தநிலையில், அவர் நாடு திரும்புவதில் எந்தவித தடையும் இல்லை என்பதுடன், இலங்கை அரசு எவ்வித ஆட்சேபனையையும் தெரிவிக்கப்போவதில்லை என்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கூறினார்.


எனவே, எந்தச் சந்தர்ப்பத்திலும் சாந்தனுக்கு நாடு திரும்ப முடியும் என்றும் அலி சப்ரி மேலும் குறிப்பிட்டார்.



# இலங்கைக்குக் கடத்த முயன்ற பெருந்தொகையான போதை மாத்திரைகளுடன் ஒருவர் இந்தியாவில் கைது

(மன்னார் நிருபர்)

இலங்கைக்குக் கடத்த முற்பட்ட பெருந்தொகையான போதை மாத்திரைகளுடன் ஒருவர் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளார். 04










# மோட்டார் சைக்கிள் மோதி இருவர் பரிதாப உயிரிழப்பு

## 9 மாதக் குழந்தை படுகாயம்

தம்புள்ளை – கண்டி பிரதான வீதியின் விஹார சந்தியில் நேற்று இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் பெண் ஒருவர் உட்பட இருவர் உயிரிழந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியோரத்தில் இருந்த நபர் ஒருவரையும், குழந்தை ஒன்றைச் சுமந்து சென்ற பெண் ஒருவரையும் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த வீதியோரத்தில் இருந்த நபரும், குழந்தையைச் சுமந்து சென்ற பெண்ணும் தம்புள்ளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அந்தப் பெண்ணும் நபரும் உயிரிழந்துள்ளனர்.

மேற்படி பெண்ணின் 9 மாதக் குழந்தை படுகாயங்களுடன் தம்புள்ளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றது.

பண்டாரகம பகுதியில் வசிக்கும் 45 வயதுடைய நபரும், அடையாளம் காணப்படாத 43 வயதுடைய பெண்ணுமே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

சடலங்கள் தம்புள்ளை வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவரும் காயமடைந்துள்ளார். அவர் பொலிஸ் பாதுகாப்பில் தம்புள்ளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.



# மேலும் 733 பேர் கைது!

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் விசேட சோதனை நடவடிக்கையின் கீழ், இன்று அதிகாலை 12.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் 733 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் போதைப்பொருள் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய 589 பேரும், குற்றப் பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ள பட்டியலில் உள்ள 144 பேரும் அடங்குகின்றனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கைதானவர்களில் 4 பேர் புனர்வாழ்வு மையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பணியகம் மற்றும் பொலிஸ் விசேட பணியகத்தால் தேடப்படும் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள 8 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சுற்றிவளைப்புகளின் போது 130 கிராம் ஹெரோயின், கஞ்சா மற்றும் ஐஸ் உள்ளிட்ட பல்வேறு வகையான போதைப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன என்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

### போலி நாணயத்தாள்களுடன்

# கொழும்பில் ஒருவர் சிக்கினார்

போலி நாணயத்தாள்களை தம்வசம் வைத்திருந்த ஒருவர் மொரட்டுவை – எகொட உயன பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் இருந்து 5 ஆயிரம் ரூபா பெறுமதியான 30 நாணயத்தாள்கள் மீட்கப்பட்டுள்ளன.

பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலை அடுத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.






# காஷ்மீர் நட்புறவு தினத்தை முன்னிட்டு ஐ.நா. அலுவலகம் முன்பாகப் போராட்டம்

(நூருல் ஹுதா உமர்)

காஷ்மீர் விடுதலைக்கான அமைப்பின் ஏற்பாட்டில்,காஷ்மீர் நட்புறவு தினத்தை முன்னிட்டு ஐக்கிய நாடுகள் சபையின் கொழும்பு அலுவலகத்தின் முன்பாக நேற்றுத் திங்கட்கிழமை (05) பதாதைகளை ஏந்திக்கொண்டு காஸ்மீர் விடுதலைக்கான அமைப்பினர் கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் இடம்பெறும் அட்டூழியங்களையும், ஆக்கிரமிப்புப் படைகள் அப்பாவி காஷ்மீரிகளை மனிதாபிமானமற்ற முறையில் நடத்துவதையும் இவர்கள் தமது பதாதைகளில் சுட்டிக் காட்டியிருந்தனர்.

ஜக்கிய நாடுகள் சபையும் ஐ.நா. மனித உரிமை அமைப்பும் இவ்விடயத்தில் தலையிட்டு இரு நாடுகளுக்கிடையிலான முரண்பாடுகளை தீர்த்து வைக்க வேண்டும். சட்டவிரோத ஆக்கிரமிப்புக்கு எதிராக காஷ்மீரிகளின் சுயநிர்ணய உரிமைக்கான நியாயமான போராட்டத்துக்கு  நீதி கிடைக்கவேண்டும் என்பதுடன் காஷ்மீர் மக்களின் நிரந்தர துயரங்களை நோக்கி உலக நாடுகளின் கவனத்தை ஈர்ப்பதற்காகவும், காஷ்மீர் மக்களின்



அபிலாஷைகளுக்கு ஏற்ப காஷ்மீர் பிரச்சினைக்கு ஐக்கிய நாடுகளின் தீர்மானங்களின் அடிப்படையில் காஷ்மீர் பிரச்சனைக்கு தீர்வு காண்பதை வலியுறுத்துகின்றனர் என்றும் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் கொழும்பு நகர சபை முன்னாள் உறுப்பினர்களான ஐ.ஏ.கலீலுர் ரஹ்மான், எஸ்.எம். முஸம்மில் உட்பட பலரும் கலந்து கொண்டு மகஜர்களையும் கையளித்தனர்.



# ஐஸ் போதைப்பொருள் பாவித்த யாழ். பல்கலை மாணவன் கைது

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

ஐஸ் போதைப்பொருள் பாவித்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பல்கலைக்கழக மாணவன் மீது வட்டுக்கோட்டை பொலிஸார் தாக்கினர் எனவும், அடி தாங்க முடியாமல் தப்பியோடி வந்த மாணவன் உயிரைக் காப்பாற்றுமாறு கோரி மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்தார் எனவும் நேற்று செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில், இன்று காலை மேற்படி மாணவனைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரால் உத்தரவிடப்பட்டது.



அந்த மாணவன் ஐஸ் போதைப் பொருள் பயன்படுத்தியமை யாழ். போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட மருத்துவப் பரிசோதனையில் உறுதியாகியுள்ளது.

மாணவனின் உடலில் பொலிஸார் தாக்கியதற்கான தடயங்களும் இல்லை எனவும் வைத்தியசாலைத் தகவல்கள் கூறுகின்றன.

வட்டுக்கோட்டை பகுதியைச் சேர்ந்த கருணாகரன் நிதர்ஷன் என்ற மாணவன் நேற்றுக் காலை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியப் பணிமனையில் முறைப்பாடு செய்த பின்னர் பொலிஸாருக்கு எதிராகப் பல்வேறு குற்றச்சாட்டுக்களை ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**எதிர்ப்புக்களையடுத்து...**

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கெஹலிய தற்போது சிறைச்சாலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்நிலையில், கெஹலிய ரம்புக்வெல அமைச்சுப் பதவியில் இருந்து விலக வேண்டும் என்று பல தரப்பினரும் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**வெவ்வேறு இடங்களில்...**

ஆகிய பகுதிகளில் இந்தக் கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

தங்காலை – குடாவெல்ல பகுதியில் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இன்று காலை மேற்படி நபரின் வீட்டுக்குள் நுழைந்த சிலர் அவரைத் தாக்கி விட்டு தப்பிச் சென்றனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, சூரியவெவ – பெத்தேவெவ பகுதியில் நேற்று 38 வயதான பெண் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

தாக்குலுக்கான காரணம் தொடர்பான தகவல்கள் வெளியாகவில்லை.

சம்பவம் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

**இலங்கைக்கு...**

இந்தியக் கடலோரப் பொலிஸார் முன்னெடுத்த சோதனையின்போது, அந்த நபர் பெரிய பட்டினம் கடற்கரை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது, அவரிடம் இருந்து 7 இலட்சம் போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன் அவர் பயணித்த படகும் ஒன்றும் கையகப்படுத்தப்பட்டுள்ளது.







# சம்பளத்தை அதிகரிக்கக் கோரி செல்வகந்தையில் ஆர்ப்பாட்டம்

மலையக பெருந்தோட்ட தொழிலாளர்களின் நாலாந்த சம்பளத்தை அதிகரிக்க கோரி பொகவந்தலாவ செல்வகந்த தோட்ட தொழிலாளர்களால் நேற்று (05)திங்கள்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்னு முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

தொழிலாளர்களின் வயிற்றில் அடிக்காதே, எங்களுக்கு சம்பளத்தை உயர்த்தி தா போன்ற சுலோகங்களை ஏந்தியவாறும் கோஷசங்கள் இட்டும் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

நாலாந்த தாம் பெறுகின்ற ஆயிரம் ரூபா சம்பளம் போதாது. நாட்டில் அத்தியாவசிய பொருள்கள் அனைத் துக்கும் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. எங்களுடைய வாழ்வாதாரத்தை கொண்டு செல்ல முடியாத ஒரு சூழ் நிலைக்கு நாங்கள் தள்ளப்பட்டுள்ளோம்.

ஆகவே நாட்டின் ஜனாதிபதி மற்றும் மக்கள் பிரதிநிதிகள் எமக்கான உரிய ஊதியத்தை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.



# தேயிலை கொழுந்து பறித்த வேளை குளவி கொட்டுக்கு ஆளான பெண்கள்

(செ.தி.பெருமாள்)

தேயிலை கொழுந்து பறித்துக் கொண்டிருந்த வேளையில் குளவி கொட்டுக்கு இலக்கான பெண்கள் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று (050 காலை தேயிலை தோட்டத்தில் தேயிலை கொழுந்து பறித்து கொண்டிருந்த லிந்துலை



பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பம்பரகலை தோட்டத்தில் குளவி கொட்டுக்கு இலக்காகிய 5 பெண் தொழிலாளர்கள் லிந்துலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தேயிலை செடிகளின் கீழ் பகுதியில் கட்டப்பட்டிருந்த குளவி கூடு கலைந்த தால் இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது என்று லிந்துலை பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஜே.வி.பிக்கு இந்திய அழைப்பு

இந்தியாவின் பரம வைரி போல இலங்கையில் செயற்பட்ட பிரதான கட்சி ஜே.வி.பி. அத்தோடு முற்றிலும் சீனச் சார்பு போக்குடைய கட்டமைப்பும் கூட. அதனால் இந்திய தரப்புடன் எப்போதும் முரண்டு பிடித்து நிற்கும் தரப்பும்தான்.

முந்திய காலங்களில் ஜே.வி.பி. தன்னுடைய இயக்கத்துக்கு உறுப்பினர்களை - ஆள்களை - சேர்க்கும் போது தனது இடதுசாரிப் போக்கு குறித்து ஐந்து வகுப்புகளை - விரிவுரைகளை - நடத்தி அவர்களை தெளிவுபடுத்தும். அந்த ஐந்தில் ஒன்றின் தலைப்பு 'இந்திய விரிவாக்கம்' அல்லது 'இந்தியா ஆக்கிரமிப்பு'. தன்னுடைய கட்சி உறுப்பினர்களைச் சேர்க்கும் போதே அவர்கள் மனதில் இந்திய எதிர்ப்பு உணர்வை வலுவாகத் தூண்டிவிடும் சிங்கள - பௌத்த கட்டமைப்பே ஜே.வி.பி.

அதற்கு வெற்றிலை வைத்து, இராஜதந்திர அந்தஸ்துகள் வழங்கி, தனது வெளிவிவகார அமைச்சுக்கு - 'சவுத் புளொக்'குக்கு அழைத்து - கௌரவித்து, சமதையாக இருத்திப் பேச்சு நடத்துகின்றது பாரதம்.

இந்தியா எங்களைக் காப்பாற்றும், ஈழத் தமிழர்களை விட்டுக் கொடுக்காது என்று இந்திய நாமார்ச்சனை செய்யும் நமது தலைவர்களோ, புதுடில்லி அழைக்கும், அழைக்கும் என்று வருடக்கணக்காக காத்துக் கிடக்கின்றார்கள் - குளம் வற்றும் என்று காத்திருந்து குடல் வற்றிச் செத்த கொக்கின் நிலைமைதான் தமிழர்களுக்கு என்பது புரியாமல்.

ஜே.வி.பியை அழைத்துப் பேசும் மோடி அரசின் வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரின் போக்குகள் - அணுகுமுறைகள் - செய்திகள் - தொடர்பில் ஒரு காத்திரமான படிப்பினை அப்படி ஜே.வி.பியை அழைத்து பேசும் இந்தியத் தரப்பின் நடவடிக்கைக்குள் பொதிந்து கிடப்பதை தமிழ் மக்களும் அவர்களின் தலைவர்களும் உய்த்துணர வேண்டும்.

ஜே.வி.பி. வெறும் அரசியல் கட்டமைப்பு அல்ல. இலங்கையில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் முகவர்கள் என்றும் கூட வெளிப்படையாக அதனைக் கூறலாம்.

சீன அரசு இலங்கை மக்களுக்கு வழங்கும் நிவாரணப் பொருள்களை இலங்கை அரசுக்கு ஊடாக - அரச கட்டமைப்புகளுக்கு ஊடாக - வழங்குவது வேறு. ஓர் அரசியல் கட்சிக்கு ஊடாக வழங்குவது வேறு.

இலங்கை மக்களுக்கான சீன அரசின் - அந்த அரசை நடத்தும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் - நிவாரண உதவியை நாடாளுமன்றத்தில் ஆக ஐந்தே ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட ஜே.வி.பி. கட்சி ஊடாக சீன நாடு இலங்கை மக்களுக்கு வழங்குகின்றது. இது இலங்கையில் பரகசியமான விடயம்.

அந்த நிவாரண உதவிகளை ஜே.வி.பி. தென்னிலங்கையோடு நிறுத்தவில்லை. வடக்குக் கிழக்குக்கும் விரிவாக்கம் செய்துள்ளது. அது பற்றிய விவரங்களை செய்திப் பட ஆதாரங்களுடன் சில தினங்களுக்கு முன்னர் நமது நாளிதழில் பிரசுரித்திருந்தோம்.

சீன நாட்டின் நிவாரண உதவியை வடக்கு, கிழக்கு தமிழர்களுக்கு ஜே.வி.பியே நேரடியாகப் பகிர்ந்தளிக்கத் தொடங்கியதும், அந்தக் கட்சிக்கு கௌரவம் அளித்து, விழுந்தடித்துப் புதுடில்லிக்குக் கூப்பிட்டு பேசுகின்றது புதுடில்லியின் சவுத் புளொக் அரசியல் தலைமைத்துவம்.

தொப்புள் கொடி உறவு என்று நம்பிக்கையுடன் காத்திருக்கும் தமிழர்களைக் கைவிட்டு, அவர்களை ஏறெடுத்தும் பார்க்காமல், 'நீங்கள் ஒற்றுமையாக இல்லை என்பதால் நாங்கள் ஒன்றும் செய்ய முடியாது' என்று கைவிரித்து, ஏளனம் பண்ணி நடந்து கொண்டிருக்கின்றது மோடி நிர்வாகம்.

தெற்கில் ஒற்றுமைப்படாமல், பிரதான தென்னிலங்கைக் கட்சிகளுடன் சண்டப் பிரசண்டம் பண்ணிக் கொண்டிருக்கும் ஜே.வி. பியை அழைத்து, பக்குவமாக நாடியைத் தடவி, தாஜா பண்ண வேண்டிய இக்கட்டில் புதுடில்லி செயல்படுகின்றது என்பது வெளிப்படையானது. தெளிவானது.

சீனச் சார்புடன் - சீன உதவித் திட்டங்களுடன் - வடக்கு, கிழக்குக்கு ஜே.வி.பி. நகர முற்படலாம் என்ற செய்தி சீன உதவி நிவாரண பொருள்களை ஜே.வி.பி. வடக்கு, கிழக்கில் விநியோகிக்கத் தொடங்கியதும் வெளிப்படையாகி இருக்கின்றது.

உடனே ஜே.வி.பியைச் சமாளிக்க புது டெல்லியில் இருந்து அதற்கு அழைப்புப் பறக்கின்றது.

இந்தச் செய்தியை தமிழர் தலைமைகள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

புதுடில்லியில் அரசியல் அலுவலகத்தைத் திறந்து, ஈழத் தமிழ் அரசியலுக்கான ஊடாட்டங்களை நடத்தப் போகின்றோம் என்று தேர்தல் விஞ்ஞாபன அறிவிப்பு கொடுப்பதாலோஅல்லதுஅதனைசெயற்படுத்துவதாலோ பயன் ஏதும் கிடைக்கப் போவதில்லை. தமிழர்கள் புதுடில்லியை நோக்கி இன்னும் கெஞ்சினால் இன்னும் உதாசீனம்தான் - புறக்கணிப்புத்தான் - அதிகரிக்கும்.

புதுடில்லியுடனான ஊடாட்டத்தை ஒரு புறம் தள்ளி வைத்துவிட்டு, நாம் பெய்ஜிங் உடனும் கூட ஊடாட வேண்டும். அப்படி செய்தால் புதுடில்லி அழைப்பு தேடி ஓடி வரும். 'நாவிழந்த' தலைமைகளால் அதைச் செய்ய முடியாமல் இருப்பதுதான் நமது துரதிஷ்டம். தாங்கள் நக்கி நம்மை வீழ்த்தியுள்ளனர் நம் தலைவர்கள்.



# மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பால் கரையோர மீனவர்களது தொழில் பாதிப்பு!

(ஹஸ்பர்)

மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பால் பாதிக்கப் பட்டுள்ளனர் என்று கிண்ணியா கரையோர மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கிண்ணியா தோனா பகுதி கரையோர மீனவர்கள் சிறிய ரக இயந்திரப் படகு மூலமே மீனவத் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள்.

தற்போது மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பால் பல்வேறு சிரமங்களை எதிர் கொள்கின்றனர் என்று தெரிவிக்கின்றனர்.

படகு மூலமான தொழில் நடவடிக்கைக்கு இயந்திரம் தேவைப்படுகிறது. இதனால் மண்ணெண்ணெய் தேவைப்படுகிறது. சிலவேலைகளில் மண்ணெண்ணெய்க்குச் செலவளிக்கும் பணத்துக்கு கூட மீன்கள் பிடி படுவதில்லை. வெறுங்கையுடன் திரும்ப வேண்டியுள்ளது எனவும் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பகுதி மக்களின் வாழ்வாதார தொழிலாக கடற்றொழில் காணப்படுகிறது. எனவே மண்ணெண்ணெய்யை மானியம் மூலமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# ஒருங்கிணைப்புக் குழுவுடன் தேசிய மக்கள் சக்தி சந்திப்பு

(அப்துல்சலாம் யாசீம்)

வடக்கு – கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு பிரதிநிதிகளுக்கும் தேசிய மக்கள் சக்தியிருக்கும் இடையிலான கலந்துரையாடல் திருகோணமலையில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் நேற்று (05) இரவு இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு – கிழக்கு தமிழ் மக்களுக்கான சமஷ்டி முறையிலான நிரந்தர அரசியல் தீர்வு தொடர்பாகவும், அதற்காக தேசிய மக்கள் சக்தியின் ஒத்துழைப்பு தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது 100 நாள் செயல் முனைவின் பின்னர் வெளியிடப்பட்ட சமஷ்டி கோரிக்கைகள் அடங்கிய பிரகடனமும் கையளிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு – கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் இணைப்பாளர் கண்டுமணி லவகுசராசா, அழகுராசா மதன் ஆகியோரும் மக்கள் விடுதலை முன்னணியின் முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹதுன்னெத்தி, திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அருண் ஹேமச்சந்திரா, நிறைவேற்றுக்குழு உறுப்பினர் ராஜேந்திரன் மற்றும் மாவட்ட செயலாளர் அசேல ஆகியோரும் கலந்து கொண்டனர்.





# பல்கலைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு!

(நூருல் ஹுதா உமர்)

மருதமுனை இளங்கலை பட்டதாரிகள் அமைப்பின் புதிய நிர்வாகத்தின் முதல் செயற்றிட்டமாக 2022 - 2023 கல்வியாண்டில் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப் பட்ட மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியின் மருதூர் கொத்தன் கலையரங்கில் அமைப்பின் தலைவர் ஏ.பைஹான் அஹமட் தலைமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு அதிதிகளாக தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் கலை மற்றும் கலாசார பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில், சட்டத்தரணி எம்.ஐ. இயாஸ்தீன், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினரும், அபிவிருத்தி உத்தியோகத்தருமான கலீல் முஸ்தபா, டாக்டர் சஸ்லி ஹமீட், பரக்கத் டெக்ஸ் முகாமைத்துவ பணிப்பாளர் எம்.ஐ.ஏ. பரீட் மற்றும் மருதமுனை



இளங்கலைப் பட்டதாரிகள் அமைப்பின் ஆலோசனை சபை உறுப்பினர்கள், இளங்கலைப் பட்டதாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் அதிதிகளால் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன.




# புற்று நோய் விழிப்புணர்வு நிகழ்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

உலக புற்றுநோய் தினத்தை முன்னிட்டுக் கடமை சபதம் நிகழ்வும் புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெற்றன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சகீலா இஸ்ஸதீன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வைத்தியர்கள் மற்றும் பணிமனை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.



# போதைப்பொருள் புனர்வாழ்வு நிகழ்வுகள் சம்மாந்துறையில்

(எம்.எப்.நவாஸ்)

அம்பாறை மாவட்ட பொலிஸ் டி.ஐ.ஜியின் வழிகாட்டலில் 'போதைப்பொருள் புனர்வாழ்வு' நிகழ்ச்சி சம்மாந்துறை ஜனாதிபதி விளையாட்டு அரங்கில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்குக் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், பொலிஸ் உயர் அதிகாரிகளான டி.ஐ.ஜி. , எஸ்.எஸ்.பி, அம்பாறை, சம்மாந்துறை, நிந்தவூர், காரைதீவு, சவளக்கடை, மத்திய முகாம் போன்ற நிலைய பொறுப்பதிகாரிகள், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா, சம்மாந்துறை ஜனாதிபதி விளையாட்டு அரங்கு பொறுப்பாளர் எ.அப்துல் சலாம் உட்பட்ட பலர் கலந்து கொண்டனர்.







# செஞ்சிலுவைச் சங்கத்தின் இலவச மருத்துவ முகாம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் முல்லைத்தீவு மாவட்டக் கிளை ஒழுங்கு செய்திருந்த இலவச மருத்துவ முகாம் கெருடமடு பிள்ளையார் கோயில் மண்டபத்தில் இடம்பெற்றது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மணல்கந்தல், வசந்தபுரம் மற்றும் கெருடமடு கிராமத்தைச் சேர்ந்த மக்கள் இந்த மருத்துவ முகாமில் கலந்து கொண்டனர்.மருத்துவம் சம்பந்தமான ஆலோசனைகள், உணவு பயன்பாடு, முதலுதவி, உடற் பரிசோதனைகள் மற்றும் மருத் துவ உதவிகளும் இந்தப் பிரதேச மக்களுக்கு வழங்கப்பட்டன.








# ரோட்டரிக் கழக ஆளுநர் திருகோணமலைக்கு வருகை

ரோட்டரிக் கழக இலங்கை மாவட்ட – 3220 ஆளுநர் ஜெரோம் ராஜேந்திரம் நேற்றுமுன்தினம் (04) திருகோணமலை ரோட்டரிக் கழகத்துக்கு விஜயம் செய்தார்.

ஆளுநரின் செயலாளர் வேலுப்பிள்ளை ரமணா, உதவி ஆளுநர் ரோய் சத்திய சுதாகர் ஆகியோரும் வருகை தந்திருந்தனர்.

திருகோணமலை ரோட்டரிக் கழகத்தின் தலைவர் வைத்திய கலாநிதி எஸ்.சௌந்தரராஜா, ஆளுநர் மற்றும் அதிதிகளை வரவேற்றார். செல்வ இசை நடன சபா மாணவிகள் வரவேற்பு நடனம் இடம்பெற்றது.

செயலாளர் என்.டி. ரகுராம் 2023 தொடக்கம் ஜனவரி 2024 வரையிலான செயல்பாடுகள் பற்றி சுருக்கமான விளக்கத்தை அளித்தார்.

இதன்போது நான்கு மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. திருகோணமலை இறால்குழி கஜமுஹா வித்தியாலய அதிபரிடம் பயிற்சிப் புத்தகங்கள் கையளிக்கப்பட்டன. ஸ்கை ரூட் டிராவல்ஸ் நிதியுதவியுடன் செவித்திறன் குறைபாடு சிகிச்சைக்காக மருதையா நகுலேஸ்வரனுக்கு ரொக்க நன்கொடை




2லட்சத்து 50ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

திருகோணமலை ரோட்டரி கழக பராமரிப்பாளர் மருதுவின் முழுமையடையாத வீட்டை த் திருத்துவதற்கு 45 ஆயிரம் ரூபா உதவி வழங்கப்பட்டது. இதற்கான நிதியைக் கே.கே கிச்சன் வழங்கியது.

ஆளுநர் ஜெரோம் ராஜேந்திரம் திருகோணமலை ரோட்டரி கழக நடவடிக்கைகளைப் பாராட்டினார்.

2024-2025 ஆம் ஆண்டுக்கான எஸ்.ஜெகதேஸ்வரன் தெரிவுசெய்யப்பட்டார்.





# காக்காச்சிவட்டையில் புதிய நெல் அறுவடை!

(வி.ரி.சகாதேவராஜா)

வெல்லாவெளி பிரதேசத்தில் உள்ள காக்காச்சிவட்டைப் பிரிவில் செய்கை பண்ணப்பட்ட ஏ.ரி. 378 என்றும் புதிய நெல்லின அறுவடை விழா நேற்று திங்கட்கிழமை (5) நடைபெற்றது.

காக்காச்சிவட்டை விவசாய போதனாசிரியர் தெ.கோபி தலைமையில் அலியார்வட்டை கண்டத்தில் முன்மாதிரி துண்டமாக செய்கை பண்ணப்பட்ட புதிய நெல்லினமான ஏ.ரி. 378 இன் அறுவடை விழாவில் பிரதம அதிதியாக உதவி விவசாய பணிப்பாளர் திருமதி நித்தியா நவரூபன் கலந்து கொண்டார்.

மற்றும் வலயத்தின் விவசாயப் போதனாசிரியர்கள், தொழில் நுட்ப உதவியாளர்கள், டிப்ளோமா பயிலுனர்கள்,



விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது புதிய நெல் இனம் சம்பந்தமான விடயங்கள், நெல் இனத்தின் இயல்புகள், விளைச்சல் பற்றியும் விவசாயிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.



# பள்ளிவாசலுக்கு மின் விசிறிகள்

(எம்.ஏ.ஏ.அக்தார், பாறுக் ஷிஹான்)

நற்பிட்டிமுனை ஆர்.கே.ஆர். சமூக சேவை அமைப்பின் பணிப்பாளர் எச்.எம்.தில்ஷாத் ஏற்பாட்டில் முன்னாள் உயர் கல்வி பிரதி அமைச்சர் மர்ஹூம் மயோன் முஸ்தபாவின் புதல்வர் றிஸ்லி முஸ்தபாவால் நற்பிட்டிமுனை ஹிக்மா ஜும்ஆ பள்ளிவாசலுக்கு 12 மின்விசிறிகள் அன்பளிப்பாக வழங்கிகப்பட்டன.

இந்த நிகழ்வில் நற்பிட்டிமுனை பள்ளிவாசல்கள் சம்மேளனம் மற்றும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் நற்பிட்டிமுனை கிளையின் தலைவருமாகிய அஷ்ஷெய்க் ஏ.எல். நாஸிர் கனி , ஹிக்மா ஜும்ஆ பள்ளிவாசல் தலைவர் ஐ.எல்.றவூப்தீன், அல்ஹாஜ் எம்.ஐ.ஏ.அஸீஸ் உட்பட பள்ளிவாசல் நர்வாகத்தினர், உலமாக்கள் மற்றும் ஜமாஅத்தினர் எனப் பலர் கலந்து கொண்டனர்.



# ‘ஊமைச் சுவடுகள்’ நூல் மன்னாரில் வெளியீடு!

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் விடத்தல் தீவைப் பிறப்பிட மாகவும் புலம்பெயர் தேசத்தில் வசிப்ப வருமான திருமதி ஜனகா ஜெகநாதன் எழுதிய ‘ஊமைச் சுவடுகள்’ எனும் பல்சுவை நூல் வெளியீட்டு விழா கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வானது விடத்தல்தீவு புனித ஜோசப் வாஸ் பாடசாலை அதிபர் ஜோ.கியோமர் பயஸ் தலைமையில் பாடசாலையின் விழா மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தி னராக வன்னி நாடாளுமன்ற உறுப்பி னர் செல்வம் அடைக்கலநாதன் கலந்து கொண்டு நூலை வெளியிட்டு வைத்தார்.

நூலின் சிறப்புரையை மன்னார் மேலதிக மாவட்டச் செயலாளர் (காணி) மாணிக்கவாசகர் சிறிஸ்கந்தகுமாரும் வாழ்த்துரையை மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் வி.ஸ். சிவகரனும் வழங்கினர். நூல் விமர்சனத்தை ஊடக வியலாளர் ஜனாப் சுவைப் எம். காசிம் வழங்கினார்.









# பொகவந்தலாவ பொலிஸில் சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு

(பொகவந்தலாவ நிருபர்)

பொகவந்தலாவ பொலிஸ் நிலையத்தில் சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு அலுவலகம் ஒன்று நேற்று(05) திங்கட்கிழமை காலை உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்பட் டது.

பொகவந்தலாவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சம்பத் பண்டார தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக ஹட்டன் பொலிஸ் வலையத்துக்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் விப்புல தெய்கம கலந்து கொண்டு அலுகவகத்தைத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் பொகவந்தலாவ பொலிஸ் நிலைய உதவி பொறுப்பதிகாரி ரத்நாயக்க, பிரதான பொலிஸ் பரிசோதகர் குமாரி மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

முன்பள்ளி பாடசாலை மாணவர்களுக்கு பரீசில்களும் இதன்போது வழங்கப்பட்டன.








# திறமைக்கான தேடல் விருது விழா!

(மாளிகைக்காடு)

லக்ஸ்டோ நெற்வோர்க் ஸ்ரீ லங்காவின் 27 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இடம்பெற்ற “திறமைக்கான தேடல் மகுடம் சூட்டும் விழா” சாய்ந்தமருது கலாசார மத்திய நிலைய மண்டபத்தில் நிறுவனத்தலைவர், கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் கலாநிதி ஏ.எல். அன்சார் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் நாட்டின் நாலா பகுதிகளிலும் இருந்தும் திறமைக்கான தேடல் விருதை பெற தகுதியான கலைஞர்கள் கலந்துகொண்டனர். இதன்போது கலைஞர்களின் கலை, இலக்கிய நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு உறுப்பினரும், அல்- மீஸான் பௌண்டஷன் தவிசாளருமான யூ.எல்.என். ஹுதா உமர், ஐக்கிய தேசிய கட்சியின் கல்முனை தொகுதி அமைப்பாளர் எஸ்.எல்.எஸ். முஹீஸ், ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலை வைத்திய அதிகாரிகள், மல்ஹறுஸ் ஸம்ஸ் மகா வித்தியாலய முன்னாள் அதிபர் நஸ்லின் ரிப்கா அன்சார், தொழிலதிபர் சிங்கர் எஸ்.எச்.எம். ஜிப்ரி, தொழிலதிபர் ஏ. ஆர். முகம்மது கியாஸ், லக்ஸ்டோ நெற்வேர்க் ஸ்ரீ லங்காவின் அமைப்பாளர் கலாபூசணம் எம்.அருளம்பலம் ஆகியோர் கொண்டனர்.

கலை, கலாசார, ஊடக, சமூக சேவையில் சேவையாற்றி வரும் பல்துறை சார்ந்தவர்கள் கௌரவிக்கப்பட்ட இந்த நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட 50 மாணவர்களுக்கு உணவுப் பொருள்களும் தெரிவு செய்யப்பட்ட 50 பேருக்கு மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன.







# மாந்தை மிணுக்கன் கிராமத்துக்கு மன்னார் அரச அதிபர் கள விஜயம்

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் அரச அதிபர் க.கனகேஸ்வரன் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள மினுக்கன் கிராமத்துக்கு உத்தியோக பூர்வமான கள விஜயத்தை மேற்கொண்டு மக்களின் தேவைகள் தொடர்பில் கேட்டறிந்தார்.

இந்த நிகழ்வானது மினுக்கன் கிராம சேவையாளர் சிறிஸ்கந்தராஜா தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (04) கிராம சேவையாளர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன் போது அரச அதிபர், ஜே.எஸ்.வி. நிறுவனம் வழங்கும் பெண் தலைமைத்துவத்தை கொண்ட குடும்பங்களுக்கான, கோழி வளர்ப்பு உதவி தொடர்பான சாதக, பாதகங்களைக் கேட்டறிந்தார்.

இந்த நிகழ்வில் மன்னார் மேலதிக அரச அதிபர் (காணி) மாணிக்கவாசகர் சிறிஸ்கந்தகுமார், மடு மற்றும் மாந்தை மேற்கு பிதேச செயலாளர்கள், பதவி நிலை உத்தியோகத்தர்கள், வனவளப் பிரிவின் பொறுப்பாளர்கள், ஜே.எஸ்.வி. நிறுவனத்தினர் பெண்கள் அமைப்பினர், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.










# காஷ்மீர் நட்புறவு தினத்தை முன்னிட்டு கருத்தரங்கும் கண்காட்சியும் கொழும்பில்

(அஷ்ரப் ஏ சமத்)

காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தில் பாகிஸ்தானின் நிபந்தனையற்ற ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில் காஷ்மீர் நட்புறவு தினத்தை முன்னிட்டு கருத்தரங்கு மற்றும் புகைப்படக் கண்காட்சி ஒன்றை கொழும்பில் உள்ள பாகிஸ்தான் தூதரகம் நேற்று (05) ஏற்பாடு செய்திருந்தது.

இந்த நிகழ்வில் பாகிஸ்தான் சமூகத்தினர், காஷ்மீர் நலன் விரும்பிகள் மற்றும் இலங்கை ஊடக பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியை ஆரம்பிக்கும் முகமாகப் பாகிஸ்தான் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் காஷ்மீர் நட்புறவு தின செய்திகள், பாகிஸ்தான் தூதரகத்தின் வர்த்தக செயலாளரால் வாசிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் முக்கிய பேச்சாளர்களாக பொருளாதார அபிவிருத்தி ஆலோசனைக் குழுவின் சபை உறுப்பினர் ஷிராஸ் யூனாஸ், வை.எம்.எம்.ஏ பெண்கள் பிரிவின் செயலாளர் திருமதி சூரியா ரிஸ்வி ஆகியோர் கஷ்மீர் நட்பு நாள் பற்றி உரையாற்றினர். காஷ்மீர் பிரச்சினைக்கு அமைதியான தீர்வை வலியுறுத்தி உரையாற்றினர்.











# தோட்ட மக்களின் சுகாதார நிலைமை தொடர்பில் சுகாதாரப் பிரிவு ஆய்வு!

(தலவாக்கலை நிருபர்)

கொட்டகலை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினரால் பத்தனை போஹாவத்த மேல் பிரிவில் வசிக்கும் தோட்ட மக்களின் சுகாதார நிலைமை மற்றும் குடியிருப்புக்கள், சுற்றுப்புறங்களின் சுத்தம் தொடர்பாக ஆராயும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நேற்று (05) இடம்பெற்ற இந்த நிகழ்வில் அப்பகுதியில் வசிக்கும் 34 தோட்டக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களிடம் குடியிருப்புக்கள் மற்றும் சுற்றுப்புறங்களை தூய்மையாக வைத்திருப்பது, டெங்கு நுளம்பு பரவுவதை கட்டுப்படுத்துவது, சுத்தமான குடி தண்ணீரைக் குடிப்பதன் முக்கியத்துவம், சீரான பயன்பாட்டுடன் வாழ்க்கை தரத்தை பராமரிப்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

சுகாதாரப் பழக்கவழக்கங்கள் தொடர்பாக இங்குள்ள மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த சுகாதாரத்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர்.

கொட்டகலை சுகாதார வைத்திய அதிகாரி கே.சுதர்சனின் பணிப்புரையின்படி, பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சாலிந்த, ஆர். சௌந்தரராகவன் மற்றும் கொட்டகலை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக அதிகாரிகள் குழுவினர் இதன்போது கலந்துகொண்டனர்.



# காரைதீவு குழந்தை இயேசு ஆலய திருவிழா திருப்பலி

(எம்.எம்.றம்ஸீன்)

காரைதீவு குழந்தை இயேசு ஆலய திருவிழா திருப்பலியானது கடந்த ஞாயிற்றுக்கிழமை பங்குத்தந்தை அருட்பணி அம்புறோஸ் அடிகளாரின் ஒழுங்கமைப்பில் நடைபெற்றது.

கடந்த 4 நாள்கள் மாலை வழிபாடுகள் இடம்பெற்றன. இறை மக்களை தயார்படுத்தும் வண்ணம் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கருப்பொருளை மையப்படுத்தியதாக இறை மக்களுக்கு சிந்தனைகள் வழங்கப்பட்டது.

அதனை தொடர்ந்து வேஸ்பர் நற்கருணை ஆராதனை வழிபாடும் இடம்பெற்றது.

திருவிழா திருப்பலியை அருட்தந்தை டெஸ்மன்ராஜ் அடிகளார் தலைமைதாங்க அருட்பணியாளர் அம்புறோஸ் அடிகளாரும் இணைந்து ஒப்புக்கொடுத்து இறைவேண்டுதல் செய்திருந்தனர். குழந்தை இயேசு திருவுருவ பவனியும் ஆலயத்தைச்சுற்றி எடுத்துவரப்பட்டு இறுதி செபத்துடன் புனித ஆசீரை பங்குத் தந்தை அருட்பணி அம்புறோஸ் அடிகளார் இறை மக்களுக்கு வழங்கினார்.

# ஜனநாயகத்தை கேள்விக்குறி ஆக்குவதால் வாரிசு அரசியலை கடுமையாக எதிர்க்கிறோம்

## மக்களவையில் பிரதமர் மோடி உரை



"அரசியல் தலைவர்களின் குடும்பங்கள் தங்கள் சொந்த உழைப்பில் வளர்ச்சி அடைவதை நாங்கள் எதிர்க்கவில்லை. வாரிசு அரசியலை மட்டுமே எதிர்க்கிறோம். வாரிசு அரசியல் என்பது ஜனநாயகத்தை கேள்விக்குறியாக்குகிறது."

– இவ்வாறு மக்களவையில் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி 31 ஆம் திகதி நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு உரையாற்றினார். அவரது உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் கடந்த 2 ஆம் திகதி முதல் நடந்து வந்தது. இதில், காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜ/ன கார்கே உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர்.

இதற்கு பதில் அளித்து மக்களவையில் பிரதமர் நரேந்திர மோடி நேற்று உரையாற்றுகையில்,

"பெண்கள், இளைஞர்கள், ஏழைகள், விவசாயிகள் ஆகிய 4 தூண்கள் குறித்தும், அவர்களது வளர்ச்சிகுறித்தும் குடியரசுத் தலைவர் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார். ஆனால், சிறுபான்மையினர் குறித்து அவரது உரையில் குறிப்பிடப்படவில்லை என்று காங்கிரஸ் மூத்த தலைவர் ஆதிர் ரஞ்சன் சவுத்ரி குற்றம்சாட்டுகிறார். உங்கள் பகுதியில் வசிக்கும் பெண்கள், இளைஞர், ஏழைகள், விவசாயிகள், மீனவர்கள், கால்நடை வளர்ப்போரை சிறுபான்மையினர் என பிளவுபடுத்துவது ஏன். இந்த நாட்டை இன்னும் எவ்வளவு காலம் துண்டாட முயற்சி செய்வீர்கள்.

எதிர்க் கட்சிகளில் திறமையான தலைவர்கள் உள்ளனர். ஆனால் அவர்கள் முன்னால் வருவதற்கு அனுமதிக்கப்படுவது இல்லை. எதிர்க்கட்சி தலைவர்கள் பலருக்கு தேர்தலில் போட்டியிட துணிவு இல்லை. பலர் தொகுதி மாறி போட்டியிட முயற்சிக்கின்றனர். சிலர் மக்களவைக்கு பதிலாக மாநிலங்களவைக்கு செல்ல விரும்புகின்றனர். காங்கிரஸ் தலைவர் கார்கே மக்களவையில் இருந்து மாநிலங்களவைக்கு மாறிவிட்டார். காங்கிரஸ் மூத்த தலைவராக இருந்த குலாம் நபி ஆசாத், வாரிசு அரசியல் பிரச்சினை காரணமாக கட்சியில் இருந்தே விலகிவிட்டார். அரசியல் தலைவர்களின் குடும்பங்கள் தங்கள் சொந்த உழைப்பில் வளர்ச்சி அடைவதை நாங்கள் எதிர்க்கவில்லை. அமித் ஷா, ராஜ்நாத் சிங் குடும்பங்களுக்கு தனி கட்சி கிடையாது. வாரிசு அரசியல் என்பது நாட்டின் ஜனநாயகத்தை கேள்விக்குறியாக்குகிறது. அதனால், வாரிசு அரசியலை மட்டுமே எதிர்க்கிறோம்.

காங்கிரஸ் கட்சி ஒரு குடும்பத்தால் நடத்தப்படுகிறது. ஒரு மகனின் நலனுக்காக மட்டுமே அந்த கட்சி கவலைப்படுகிறது. நாட்டின் கோடிக்கணக்கான குடும்பங்கள் குறித்து காங்கிரஸுக்கு அக்கறை இல்லை. ஒரேபொருளை சந்தையில் மீண்டும் மீண்டும் அறிமுகம் செய்கிறார்கள். இதனால், அந்த கடை மூடப்படுகிறது." – என்றார்.

# தமிழக மீனவர் கைது செய்யப்படுவதைக் கண்டித்து பாம்பனில் எதிர்வரும் 10 ஆம் திகதி ஆர்ப்பாட்டம்

## காங்கிரஸ் அறிவிப்பு

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் கைது செய்யப்படுவதைக் கண்டித்து எதிர்வரும் 10 ஆம் திகதி பாம்பனில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கொமிட்டித் தலைவர் கே.எஸ். அழகிரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மு.க. அழகிரி வெளியிட்டுள்ள அறிக்கை,

"கடல் தாமரை மாநாடு நடத்தி மீனவர்களுக்கென தனி அமைச்சகம் தொடங்கப்படும் என அறிவித்து, 10 ஆண்டுகள் ஆகியும் அதை நிறைவேற்றாத பா.ஜ.க. அரசு, மீனவர்களின் வாழ்வாதாரத்தை தொடர்ந்து சீரழித்து



வருகிறது.

அத்துடன், இலங்கை கடற்படையினரின் தொடர் அட்டூழியத்தின் மூலம் மீனவர்கள் கைது, படகுகள் பறிமுதல், சிறைவாசம் தொடர்கதையாகி வருவதையும், கண்டிக்கிற வகையில் மத்திய பா.ஜ.க. அரசுக்கு எதிராக அகில இந்திய மீனவர் காங்கிரஸ் தலைவர் ஆம்ஸ்ட்ராங் பெர்னாண்டோ தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளது.

இதற்கமைய, எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணியளவில் இராமேஸ்வரம், அன்னை இந்திரா தேசிய நெடுஞ்சாலை பாலம் அருகில் உள்ள பாம்பன் பஸ் நிலையத்தின் முன்பு, மீனவ அமைப்புகளை இணைத்துக் கொண்டு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்."

– என்று குறிப்பிட்டுள்ளார்.

# பிரதமர் பதவிக்கு தகுதியானவர் இண்டியா கூட்டணியில் இல்லை

## அண்ணாமலை கருத்து



இண்டியா கூட்டணியில், பிரதமர் பதவிக்கு தகுதியானவர்கள் இல்லை என தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

என் மண், என் மக்கள் யாத்திரையை தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை, திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசியில் நேற்று முன்தினம் மாலை மேற்கொண்டார்.

இதன்போது அவர் உரையாற்றுகையில்,

“ தமிழகத்தில் அரசியல் மாற்றம் வர வேண்டும் என அனைத்து தரப்பு மக்களும் விரும்புகின்றனர். குடும்ப அரசியல், சாதி அரசியல், ஊழல் மற்றும் அடாவடியை மையப்படுத்தி 70 ஆண்டுகளாக ஆட்சி நடைபெற்று வருகிறது. இந்த நான்கும் மக்களுக்கு பிடிக்கவில்லை. தி.மு.க. தேர்தல் அறிக்கையில் 5 ஆண்டுகளில் மூன்றரை லட்சம் பேருக்கு அரசு வேலை வழங்கப்படும் என கூறப்பட்டுள்ளது. ஆனால், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் 31 மாதங்களாக 10 ஆயிரத்து 400 பேர் மட்டுமே தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

மக்களின் வளர்ச்சிக்காக இல்லாமல், குடும்பத்தின் வளர்ச்சிக்காக மட்டும் அரசு உள்ளது என முதல்வர் மு.க.ஸ்டாலின் மீண்டும் மீண்டும் நிருபித்து வருகிறார். அவரது மகன், மருமகன், அமைச்சர்களின் வளர்ச்சிக்காக மட்டும் ஆட்சி நடத்தப்படுகிறது.

கொடுமையான வாழ்க்கையுடன் விவசாயிகள் வாழ்கின்றனர். செய்யாறு அடுத்த மேல்மா சிப்காட் திட்டத்துக்கு மூன்று போகம் விளையக்கூடிய நிலங்களை கொடுக்க மறுத்த விவசாயிகளை தி.மு.க. அரசு குண்டர் சட்டத்தில் கைது செய்தது. களத்தில் பா.ஜ.க. இறங்க தயாரானதும் குண்டர் சட்டம் ரத்து செய்யப்பட்டன. இந்தியாவில் விவசாயிகள் மீது குண்டர் சட்டத்தை பதிவு செய்து கைது செய்தது தி.மு.க. அரசு மட்டும் தான். ஊழல் மலிந்த தி.மு.க. ஆட்சிக்கு எச்சரிக்கை கொடுக்கும் வகையில் 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தல் அமைய உள்ளன. ” – என்றார்.



# விஜய்யை பார்ப்பதற்கு திரண்ட ரசிகர்கள்: கடலூர் வீதியில் போக்குவரத்து நெரிசல்

படப்பிடிப்பில் கலந்து கொண்ட நடிகர் விஜய்யைக் காண ரசிகர்கள் திரண்டதால், புதுச்சேரி – கடலூர் வீதியில் ஏற்பட்ட போக்குவரத்து நெரிசலில் மக்கள் சிரமங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

புதுச்சேரியில் முக்கிய பஞ்சு ஆலையாக விளங்கிய ஏ.எப்.டி. தற்போது மூடப்பட்டுள்ளது. இங்கு படப்பிடிப்புகள் நடந்து வருகின்றன.

இந்த நிலையில் வெங்கட்பிரபு இயக்கத்தில் விஜய் நடித்து வரும் ‘கோட்’ திரைப்படத்துக்காக புதுச்சேரி – கடலூர் சாலையில் உள்ள ஏ.எப்.டி. பஞ்சு ஆலையில் படப்பிடிப்பு அரங்கு அமைக்கப்பட்டு, காட்சிகள் படமாக்கப்பட்டு வருகின்றன.

‘தமிழக வெற்றி கழகம்’ கட்சி தொடங்கி தலைவரான பின்னர் நடிகர் விஜய் படப்பிடிப்புக்காக புதுச்சேரி வந்ததால் ஏ.எப்.டி. பஞ்சு ஆலையின் முன்பு நேற்று முன்தினம் ரசிகர்கள், ரசிகைகள் குவிந்தனர். அப்போது, விஜய் வானில் ஏறி கை அசைத்தார்.

இந்த நிலையில், 2 ஆம் நாளாக நேற்றும் விஜய்யைப் பார்க்க ஏ.எப்.டி. பஞ்சு ஆலை முன்பு ரசிகர்கள் குவிந்தனர். அதைத்தொடர்ந்து வாயில் முன்பு பெரிய வான் நிறுத்தப்பட்டு, அதில் ஏறி விஜய் தனதுரசிகர்களைப் பார்த்து கையசைத்தார். அவரைப் பார்த்தவுடன் ரசிகர்கள் பூக்கள் வீசினர், பலூன்களைப் பறக்க விட்டனர்.

அப்போது ரசிகர்கள் சுவற்றின் மீது ஏறத்தொடங்கினர். அவர்களை பொலிஸார் தடியால் அடித்து தடுத்து நிறுத்தினர். ரசிகர்களைச் சந்தித்தபின் விஜய் மீண்டும் படப்பிடிப்பு தளத்துக்கு சென்று விட்டார்.

கடலூர் வீதியில் ரசிகர்கள் குவிந்ததால் அப்பகுதியில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இதனால் மாலையில் பாடசாலை, கல்லூரி, அலுவலகம் முடிந்து செல்லும் மக்கள் நெரிசலில் சிக்கி அவதிப்பட்டனர். ஒரு மணி நேரத்துக்குப் பின்னர் போக்குவரத்து சீரானது.





# ஆளில்லா விமான தாக்குதலில் ஆறு குர்திஷ் போராளிகள் பலி!

சிரியாவில் உள்ள மிகப்பெரிய அமெரிக்க இராணுவத் தளத்தின் மீது நடத்தப்பட்ட ஆளில்லா விமான தாக்குதலில் 6 குர்திஷ் போராளிகள் உயிரிழந்துள்ளனர்.

எனினும், இந்த தாக்குதலில் உயிரிழந்தவர்கள் தொடர்பான எவ்வித தகவல்களையும் அமெரிக்கா இன்னும் வெளிப்படுத்தவில்லை.

சிரிய கூட்டுப்படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் ஈரான் ஆதரவு போராளிகள் அமைப்பு ஆளில்லா விமானங்களை ஏவுவதாக குற்றஞ்சாட்டப்படுகின்றது.

ஈரான் ஆதரவு போராளி குழு ஒன்று இந்த தாக்குதலுக்கு உரிமை கோரியுள்ளது.

ஜோர்தானில் உள்ள தளத்தின் மீது நடத்தப்பட்ட ஆளில்லா விமானத் தாக்குதலுக்குப் பதிலடியாக வார இறுதியில் ஈராக் மற்றும் சிரியாவில் ஈரான் ஆதரவு குழுக்களுக்கு எதிராக அமெரிக்கா தாக்குதல்களை நடத்தியதில் இருந்து இது இரண்டாவது சம்பவம் ஆகும்.

# உக்ரைனின் தாக்குதலில் 28 பேர் பலி!



ரஷ்யாவால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள கிழக்கு உக்ரைனின் லெசின்சாங்க்ஸ் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலில் 28 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

மேற்படி தாக்குதலை உக்ரைன் நடத்தியதாக ரஷ்யா குற்றம் சாட்டியுள்ளது.

இந்தநிலையில், ரஷ்ய இராணுவ வீரர்களை இலக்கு வைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

# மன்னர் சார்ல்ஸுக்கு புற்றுநோய் பாதிப்

பிரித்தானிய மன்னர் மூன்றாம் சார்ல்ஸ் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டுள்ளார் என பெக்கிங்ஹாம் அரண்மனை அறிவித்துள்ளது.

75 வயதான மன்னர் சார்ல்ஸ் 2023 ஆம் ஆண்டு மன்னராக முடி சூடிக் கொண்டார்.

அவரது தாயார் இரண்டாம் எலிசபெத் ராணி, 2022 இல் உயிரிழந்தார். அதனையடுத்து அவர் மன்னராக பொறுப்பேற்றார்.

இளவரசர்கள் வில்லியம் மற்றும் ஹரியின் தந்தையும், மன்னருமான சார்ல்ஸ் அண்மையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருந்தார்.

இந்த நிலையில், அவருக்கு புற்றுநோய் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது.

இதையடுத்து அவருக்கு அதற்கான மருத்துவ சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பொதுவெளியில் நடைபெறும் நிகழ்வுகளில் அவரை பங்கேற்க வேண்டாம் என மருத்துவர்கள் பரிந்துரைத்துள்ளனர்.

அதேநேரத்தில் தமது வழக்கமான ஏனைய பணிகளை மன்னர் மேற்கொள்வார் என தெரிவிக்கப்படுகின்றது.

ஊகங்களைத் தடுக்கும் நோக்கிலும், புற்றுநோயால் சர்வதேச ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு விழிப்புணர்வை



ஏற்படுத்தும் நோக்கிலும், மன்னர் தமக்கு ஏற்பட்டுள்ள புற்றுநோய் தொடர்பில் வெளிப்படையாக அறிவித்துள்ளார் என பெக்கிங்ஹாம் அரண்மனை தெரிவித்துள்ளது.